## திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,

ந.க.எண்.947/2018/பேரூ2.

நாள்: 16.10.2018.

பொருள்: நேரடி நியமனம்– தமிழ்நாடு அமைச்சுப்பணி/ தமிழ்நாடுநீதித்துறை அமைச்சுப்பணி/ தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலபதிவுறுத் துறைப்பணி/ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16ல் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு–இளநிலை உதவியாளர்/ நிலஅளவையர்/வரைவாளர் உள்ளிட்ட தொகுதி 4ல் அடங்கிய பணிகள் –திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு– தேர்வாளர் விபரம் அனுப்பி வைக்கப்பட்டது– திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது– பணி நியமனம் செய்தது– பணிவரண்முறை செய்து ஆணையிடல்–தொடர்பாக.

பார்வை:

1. சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் செயலாளர் கடிதம் எண்.5436/பிஎஸ்டி–எச்2/2017 நாள் 13.03.2018.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.947/2018/பேரூ2, நாள்: 22.03.2018.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

------

**ஆணை:–**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் 2015–2016ல் நடத்தப்பட்ட தொகுதி 4ல் இளநிலை உதவியாளர்/ நிலஅளவையர்/வரைவாளர் உள்ளடங்கிய பணிகளுக்கான போட்டித் தேர்வில் தேர்வு பெற்ற திரு ஆர்.ராஜா என்பவருக்கு, திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்து பணியிட நியமன ஆணை வழங்க பார்வை–1ல் காணும் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பார்வை–2ல் காணும் செயல்முறைகளின்படி தனியருக்கு கன்னிவாடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது. இவர் 27.03.2018 அன்று முற்பகல் முதல் அப்பேரூராட்சியில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015–2016ஆம் ஆண்டுக்கான தொகுதி –4ன் தேர்வு தொடர்பாக சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நீதிப்பேராணை வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு இவர் பணியேற்றுக் கொண்ட நாள் முதல் இவரது பணியினை வரண்முறை (Service Regularaization) செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் | பதவி மற்றும் பணி புரியும் அலுவலகம் | பணியேற்ற நாள் |
|---|---|---|---|
| 1 | திரு ஆர்.ராஜா | இளநிலை உதவியாளர், கன்னிவாடி பேரூராட்சி | 27.03.2018 மு.ப. |

பணி வரண்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவர்களது தகுதிகாண் பருவகாலம் தொடங்குகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

பெறுநர்

திரு ஆர்.ராஜா, இளநிலை உதவியாளர், கன்னிவாடி பேரூராட்சி
(செயல் அலுவலர் வழியாக)

நகல்:– 1) பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –2.
3) செயல் அலுவலர், கன்னிவாடி பேரூராட்சி.